No. of Printed Pages : 8

பதிவு எண்

# பகுதி I – பொதுத் தமிழ் முதல் தாள்

www.usefuldesk.com

நேரம் : 2.30 மணி ] [ மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்** : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்தவும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி - I

உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **20x1=20**

1. தாயுமானவர் ஆற்றிய பணி :

(அ) படைத்தலைவர் (ஆ) அரசுக்கணக்கர் (இ) அமைச்சர்

2. கான மஞ்ஞைக்குக் கலிங்கம் ஈந்தவன் :

(அ) காரி (ஆ) பேகன் (இ) பாரி

3. ஐங்குறுநூற்றில் மருதத்திணைப் பாடல்களைப் பாடியவர் :

(அ) அம்மூவனார் (ஆ) கபிலர் (இ) ஓரம் போகியார்

[ திருப்புக

www.usefuldesk.com www.usefuldesk.com

4. "மருள்" என்பதன் இலக்கணக் குறிப்பு :

(அ) பெயரெச்சம் (ஆ) உவமஉருபு (இ) பண்புத்தொகை

5. தமிழ்மாதின் இனிய உயிர்நிலை என்று பாராட்டப் பெறுவது ?

(அ) சிலப்பதிகாரம் (ஆ) திருக்குறள் (இ) ஆசியஜோதி

6. "பீலிபெய் சாகாடு" என்ற குறட்பாவில் பயின்று வரும் அணி :

(அ) பிறிதுமொழிதல் அணி

(ஆ) வேற்றுப்பொருள் வைப்பணி

(இ) இல்பொருள் உவமையணி

7. திருக்குறள் என்பது :

(அ) பண்புப்பெயர்

(ஆ) அன்மொழித் தொகை

(இ) அடையடுத்த கருவியாகு பெயர்

8. சீவகசிந்தாமணிக்கு உரை கண்டவர் :

(அ) அடியார்க்கு நல்லார்

(ஆ) இளம்பூரணர்

(இ) நச்சினார்க்கினியர்

www.usefuldesk.com

www.usefuldesk.com www.usefuldesk.com

9. விடமீட்ட படலம் ________ காண்டத்தில் உள்ளது.

(அ) செம்பொருட் காண்டம்

(ஆ) செலவியற் காண்டம்

(இ) பிறப்பியற் காண்டம்

10. மனோன்மணீயத்தை இயற்றியவர் :

(அ) சுந்தரமுனிவர்

(ஆ) சுந்தரர்

(இ) சுந்தரம் பிள்ளை

11. ''வாரி''- பொருள் தருக.

(அ) கடல் (ஆ) பெண்கள் (இ) மலை

12. ''கலகலென'' என்பதன் இலக்கணக் குறிப்பு :

(அ) பெயரெச்சம் (ஆ) இரட்டைக்கிளவி (இ) அடுக்குத்தொடர்

13. அழகர் கிள்ளை விடுதூது ஏறக்குறைய ________ ஆண்டுகளுக்கு முந்திய நூலாகும்.

(அ) 250 (ஆ) 350 (இ) 150

14. இன்றைய ________ மாநிலம் பண்டு கலிங்கம் என்று வழங்கப்பட்டது.

(அ) குஜராத் (ஆ) ஒரிசா (இ) மகாராஷ்டிரா

[ திருப்புக

www.usefuldesk.com

www.usefuldesk.com

15. பிள்ளைத் தமிழின் பத்துப் பருவங்களில் முதல் பருவம் :

(அ) சிற்றில் (ஆ) காப்பு (இ) தால்

16. ''நமக்குள்ளே மலரட்டும் நல்லிணக்கம்''

– என்னும் கவிதை நூலின் ஆசிரியர் :

(அ) நா. காமராசன்

(ஆ) சிற்பி பாலசுப்ரமணியம்

(இ) ந. கருணாநிதி

17. ''மாற்றம் எனது மானிடத் தத்துவம்'' என்று பாடியவர் ________ .

(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) கண்ணதாசன்

18. ''மருள் நீக்கியார்'' என்பவர் :

(அ) திருநாவுக்கரசர் (ஆ) சுந்தரர் (இ) திருஞானசம்பந்தர்

19. ''ஆழிமழைக் கண்ணா!'' – என்னும் பாடலை இயற்றியவர் :

(அ) திருநாவுக்கரசர் (ஆ) சுந்தரர் (இ) ஆண்டாள்

20. ''கொய்ம்மலர்'' என்பதன் இலக்கணக் குறிப்பு :

(அ) உம்மைத்தொகை (ஆ) வினைத்தொகை (இ) பண்புத்தொகை

www.usefuldesk.com

www.usefuldesk.com www.usefuldesk.com

## பகுதி - II

பின்வரும் வினாக்களுள் வினா எண் 30 -க்கு **கட்டாயம்** விடையளிக்க வேண்டும். மீதமுள்ள 21 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் **எவையேனும் ஆறனுக்கு** மட்டும் விடை தருக. **7x2=14**

21. புறநானூறு பற்றிக் குறிப்பு வரைக.

22. அமரருள் உய்ப்பது எது ?

23. பிரித்து எழுதி, பகுபத உறுப்பிலக்கணம் தருக.

    1. ஈன்ற    2. பணிதல்

24. "யாகாவா" - எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.

25. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

    1. பாடினாள்    2. வெருவி

26. திருத்தக்க தேவர் படைத்த வேறொரு நூல் யாது ?

27. வையம் கலக்குமாறு தமிழர் செய்யத்தக்கது யாது ?

28. தஞ்சை வேதநாயக சாத்திரியார் எழுதிய பிறநூல்கள் யாவை ?

29. திருப்பாவை – குறிப்பெழுதுக.

30. "கெடும்" – என முடியும் குறட்பாவை எழுதுக.

[ திருப்புக

www.usefuldesk.com www.usefuldesk.com

## பகுதி - III

பின்வரும் வினாக்களுள் வினா எண் **40 -க்கு கட்டாயம்** விடையளிக்க வேண்டும். மீதமுள்ள **31** முதல் **39** வரையுள்ள வினாக்களுள் **எவையேனும் ஆறனுக்கு** மட்டும் விடை தருக.

**7x3=21**

**31.** குறிப்பு வரைக : தாயுமானவர்.

**32.** ஒருவன் ஆராய வேண்டிய நால்வகை வலிமைகள் யாவை ?

**33.** பொருளைப் போற்றி வழங்கும் நெறியாக வள்ளுவர் உரைப்பன யாவை ?

**34.** "நங்கை நலத்தது இது" - இடஞ்சுட்டுப் பொருள் விளக்குக.

**35.** சீறாப்புராணம் எத்தனை காண்டங்களையுடையது ? அவை யாவை ?

**36.** பிறந்தார் எனப்படாதார் யார் ?

**37.** குறத்தி ஏதன் மலையைப் பற்றி உரைப்பன யாவை ?

**38.** தளை என்னும் பாடல் மூலம் கவிஞர் உணர்த்த விரும்பும் செய்தியை விளக்குக.

**39.** வீரசோழிய மேற்கோள் புத்தபெருமானை வழிபடும் அழகை விவரிக்கவும்.

**40.** புணர்ச்சி விதி தருக.

1. உறுமிடம் 2. செறிவறிந்து

www.usefuldesk.com

www.usefuldesk.com www.usefuldesk.com

## பகுதி - IV

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. 7x5=35

41. அடக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

**அல்லது**

வலியறிதல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

42. வளைகளில் ஒன்று மட்டும் அடைபடாதிருந்ததற்கான காரணத்தையும் அபூபக்கர் அதை எவ்வாறு அடைத்தார் என்பதையும் விளக்குக.

**அல்லது**

''முன்னோர் நொந்த புண்'' என்று ஜீவகன் உணர்த்துவன யாவை ?

43. ஆடுக செங்கீரை என்று குமரகுருபரர் வேண்டுமாறு யாங்ஙனம் ?

**அல்லது**

பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

44. உவமையணியின் இலக்கணம் கூறி சான்றுடன் விளக்குக.

**அல்லது**

வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

45. பூக்கட்டும் புதுமை என்னுந் தலைப்பில் அமைந்துள்ள கவிதை அழகினை விவரிக்கவும்.

**அல்லது**

சிலுவைமிசைக் கண்ட இறைவனது பண்பாக எச்.ஏ. கிருஷ்ணபிள்ளை கூறுவன யாவை ?

[ திருப்புக

www.usefuldesk.com

www.usefuldesk.com www.usefuldesk.com

46. வதுவை செல்லா நின்றுழித் தலைமகற்குத் தோழி கூறியவற்றை விளக்குக.

**அல்லது**

''தண்ணீர் வங்கிகள் நமக்கு வேண்டும்'' என்று கவிஞர் ந. கருணாநிதி கூறியதற்கான காரணங்கள் யாவை ?

47. ''வைய மீன்றதொன் .....'' எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப்பாடலை அடிபிறழாமல் எழுதி அதன் பாவகையை சுட்டுக.

**அல்லது**

''ஆதிமலை .....'' எனத் தொடங்கும் பெத்தலகேம் குறவஞ்சிப் பாடலை அடிபிறழாமல் எழுதி அதன் பா வகையை சுட்டுக.

-oOo-

www.usefuldesk.com

www.usefuldesk.com www.usefuldesk.com